**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**

**மோ.வா.வி.கோ.மனு எண். 185/2018**

பெயர் - திருமதி.ரவி செல்வி RTO எ.ம.சா.1

த/பெ -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

ஜாதி -

மதம் -

வயது -

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :-**

நான் வள்ளியூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் வட்டார போக்குவரத்து அலுவலர் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார் அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அங்கீகார கடிதம் **சா.சா.ஆ.1.**

அழைப்பாணையில் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, கூடன்குளம், வடக்குத்தெருவில் வசித்து வரும் தனபால் மகன் பிரகாஷ் என்பவருக்கு 05.02.2018 ம் தேதியில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என்று ஆவணங்கள் தா்கல் செய்து சாட்சியம் அளிக்கும் படி சொல்லப்பட்டிருந்தது அதன் அடிப்படையில் மேற்கண்ட முகவரியை வைத்து கணினியில் தரவுகளை பரிசோதித்த போது மேற்படி முகவரியில் வசித்து வரும் நபருக்கு மேற்படி தேதியில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என தெரிய வந்தது அது சம்பந்தமாக அறிக்கை தாக்கல் செய்கிறேன். ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் அவருக்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் போது தணிக்கை அறிக்கை

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.21 17:59:03 +0530

வழங்கப்பட்டது அதன் தொடர்ச்சியாக மேற்படி பிரகாஷ் ரூ.1000/- அபராதம் செலுத்தியுள்ளார். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் தனிக்கை அறிக்கை வழங்கப்படட விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அபராதம் செலுத்தியதற்கான ரசீது அதனுடன் இணைத்து தாக்கல் செய்கிறேன். ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதற்காக மோட்டார் வாகன ஆய்வறிக்கை அபராதம் செலுத்தப்பட்ட கணினி தரவு இணைத்து அறிக்கையுடன் தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.2**.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ஓட்டுநர் உரிமம் இல்லை என சொல்லப்படவில்லை ஓடடுநர் உரிமம் சமர்பிக்கப்படவில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** -இல்லை

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.21 17:59:12 +0530